பிரதமசெயலாளர் செயலகம்,வடக்குமாகாண சபை
ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

A9 வீதி,கைதடி,யாழ்ப்பாணம்.
A9 පාර,කයිදඩි,යාපනය.
A9 Road,Kaithady, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/BDT/04/19/CIR-BDT/2019 Date : 02.05.2019

பாதீட்டுச் சுற்றுநிருப இலக்கம் : BDT/CIR/01 /2019

செயலாளர்கள்,
பிரதிப் பிரதமசெயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடமாகாணம்.

## செலவினத்திற்கானஅதிகாரமளித்தல் - 2019

2019ம் ஆண்டின் ஆரம்பத்தில் ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்காமையினால் ஒதுக்கீட்டுச் சட்டமொன்று அங்கீகரிக்கப்படும்வரை செலவினங்களை மேற்கொள்வதற்கு 2019 ம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு இடைக்கால வாக்குப் பணக் கணக்கிற்கு கௌரவஆளுநர் அவர்களின் அங்கீகாரம் பெறப்பட்டது.

இடைக்கால வாக்குப் பணக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட செலவினங்களையும் சேர்த்து 17.04.2019ம் திகதி 2019ம் நிதிவருடத்திற்கான நிதிக்கூற்று, 1987ம் ஆண்டின் 42ம் இலக்கமுடையதும் 1990ம் ஆண்டின் 28ம் இலக்க திருத்தப்பட்ட மாகாண சபை சட்டத்தின் பிரிவு 27Aற்கு அமைவாக கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, கௌரவ ஆளுநர் அவர்கள் நிதிக்கூற்று 2019 மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ளும் வகையில் ஆணைப்பத்திரங்களில் கையொப்பமிட்டுள்ளார்.

இதற்கமைவாக, அங்கீகாரமானது கொடுப்பனவு வவுச்சர்கள் மற்றும் ஏனைய ஆவணங்களில் பின்வருமாறு குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அ. பொதுவானசேவைகள் -. 2019 - ஆம் ஆண்டின் G/NPC/A5/HG/NPC/CS ஆம் இலக்க 17.04.2019 ம் திகதிய பொதுவான ஆணைப்பத்திரம்.

ஆ. முற்பணக் கணக்குசெயற்பாடுகள் - 2019 ஆம் ஆண்டின் G/NPC/A5/HG/NPC/CS ஆம் இலக்க 17.04.2019 ம் திகதிய முற்பண ஆணைப்பத்திரம்

### 2. இடைக்கால வாக்குப்பணக் கணக்கினை இடைநிறுத்தல்

இடைக்கால வாக்குப்பணக் கணக்கின் மூலம் ஒதுக்கீடுசெய்யப்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியதாக 2019 நிதிவருடத்திற்கான நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளதனால் கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்துடன் இடைக்கால வாக்குப்பணக் கணக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக 2019 நிதிவருடத்திற்கான கணக்கீட்டு நடவடிக்கைகள் அனைத்தும் கௌரவஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட 2019ம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவேண்டும்.

இவ் வருடத்தில் குறிப்பிடத்தக்களவு காலம் ஏற்கனவே கடந்துவிட்டது என்றவகையில் பாதீட்டு முன்மொழிவுகளை திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கு உரியஅமைச்சுக்கள்/திணைக்களங்கள் உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயற்படுத்துகை முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் உரிய பின்னூட்டல் நடவடிக்கைகள் மூலம் இற்றைப்படுத்தல் வேண்டும் என்பதுடன் முன்னேற்ற அறிக்கைகளினை திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

### 3. செலவினங்களின் முகாமை

நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, ஏதேனும் செலவினத்தினை மேற்கொள்வதற்கு முன்னர் வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாட்டின் கிடைப்பனவை உறுதிப்படுத்தவது அவசியமாகும். பிரதானகணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டுஅலுவலர்கள் அனைவரும் இது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

### 4. முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

அங்கீரிக்கப்பட்ட வரையறைக்குள் மேற்பார்வை செய்வதன்மூலம் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளை முகாமைசெய்வது உரியஅலுவலர்களின் பொறுப்பாகும். விசேடமாக ஆகக்கூடிய செலவின வரையறையினை அதிகரிப்பதற்கு மேலதிக ஒதுக்கீடுகள் வழங்கப்படமாட்டாது. எனவே, கணக்கீட்டு அலுவலர்கள் முற்பணக் கணக்குச் செயற்பாடுகளை உரிய எல்லைகளுக்குக் கட்டுப்பாட்டு மேற்கொள்ளல் வேண்டும்.

### 5. தெளிவுபடுத்தல்கள்

இச்சுற்றுநிருபத்தின் உள்ளடக்கம் தொடர்பாக ஏதேனும் தெளிவபடுத்தல்கள் தேவைப்படுமாயின் மாகாணத் திறைசேரியின் பாதீட்டுப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதமசெயலாளர்,
வடமாகாணம்.

அ. பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

பிரதிகள் :

1.ஆளுநரின் செயலாளர், வட மாகாணம் - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத்தருவதற்காக

2. பிரதிக் கணக்காய்வாளர் நாயகம், வட மாகாணம் } தகவலுக்காக

3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வட மாகாணம் }